# வேலைச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு - சுத்திகரிப்பு

நோய்த்தொற்று உள்ள ஒரு நபர் இருமும்போது அல்லது தும்மும்போது அவருடைய சுவாசபாதைத் திரவத் துகள்களின் மூலமாக 'கோவிட்-19' நோய் பரவுகிறது. இந்த வைரஸ் உள்ள ஒரு பரப்பு அல்லது பொருளைத் தொட்ட பிறகு ஒருவர் தனது வாய், நாசி அல்லது கண்களைத் தொடுவதன் மூலம் அவருக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்படக்கூடும்.

வேலைத்தலங்கள் குறைந்தபட்சமாக ஒரு நாளைக்கு ஒரு முறையாவது கட்டாயமாக சுத்திகரிப்பு செய்யப்படவேண்டும். சோப்புத்தூள் மற்றும் தண்ணீரைக் கொண்டு சுத்திகரிப்பது போதுமானதாகும்.

நீங்கள் செய்யவேண்டியவை:

- மேற்பரப்புகளைத் தொடுவதைக் குறைந்தபட்சமாக்கிக் கொள்ளவேண்டும்; அடையாளக் குறிகளை அங்கங்கு வைக்கவேண்டும், மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இதைப் பற்றி நினைவூட்டுவதில் உங்களுடைய தொழிலாளர்களுக்கு உதவியாக இருக்கவேண்டும்.
- தொழிலாளர்களுடைய கைகள் படும்படியாக உள்ள இடங்களைக் குறைக்கவேண்டும்.
- இயன்றால், நுழைவு-வாயிலிலும், வெளியேறல்-வழியிலும் கை கழுவல் அல்லது கைச் சுத்திகரிப்பான் வசதிகளை ஏற்பாடு செய்யுங்கள்.

## சுத்திகரிப்பும் கிருமிநீக்கமும் செய்வது எப்படி

ஒரு மேற்பரப்பினைக் கிருமி நீக்கம் செய்வதற்கு முன்பாக, அந்த இடம் முதலில் சுத்தம் செய்யப்படவேண்டியது முக்கியம். தூசி மற்றும் அழுக்குப்படிவு இருந்தால் கிருமி நாசினிகளுக்குள்ள கிருமிகளைக் கொல்லும் திறன் குறையக்கூடும்.

தகுந்த சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினிப் பொருட்களையும், சரீரப் பாதுகாப்பு சாதனங்களையும் நீங்கள் உங்களுடைய தொழிலாளர்களுக்குக்

கொடுக்கவேண்டும், மற்றும் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு இருப்பதை நீங்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

## சுத்திகரிப்பு மற்றும் கிருமிநீக்கம் ஆகியவற்றிற்கு இடையேயுள்ள வித்தியாசம் என்ன?

**சுத்திகரிப்பு** என்பது, சோப்பு மற்றும் தண்ணீர் கலந்த கலவையைப் பயன்படுத்தி நுண்ணுயிரிகளையும் (கிருமிகள் மற்றும் வைரசுகள்), தூசி மற்றும் அழுக்குப் படிவுகளையும் மேற்பரப்புகளில் இருந்து நாமே அகற்றுவதாகும்.

**கிருமிநீக்கம்** என்பது, இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி மேற்பரப்புகளிலுள்ள கிருமிகளைக் கொல்வதாகும். வைரஸ் தொற்று ஒரு மேற்பரப்பில் ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற தருணத்தில் மட்டுமே பொதுவாக கிருமிநாசினிகளுக்கான தேவை ஏற்படும்.

## எந்தப் பகுதிகளைச் சுத்திகரிப்பும் கிருமிநீக்கமும் செய்யவேண்டும், மற்றும் எவ்வெப்போது செய்யவேண்டும்?

கதவின் கைப்பிடிகள், 'கௌண்ட்டர்கள்' தொலைபேசிகள், EFTPOS, மற்றும் கழிவறை வசதிகள் போன்ற அடிக்கடி கை படும் பரப்புகள் எதுவும் தவறாமல் அவ்வப்போது சுத்தம் செய்யப்படவேண்டும்.

கண்ணுக்குத் தெரியும் அளவிற்கு அழுக்காயுள்ள, அல்லது சிந்தல்கள் உள்ள பரப்புகள் கூடிய விரைவில் சுத்தம் செய்யப்படவேண்டும்.

உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் 'கோவிட்-19' நோய்த்தொற்று வேலைத்தலத்தில் இருந்தால், கிருமிநீக்கம் அவசியம். உங்களுடைய வேலைத்தலத்திற்குள் ஒவ்வொரு நாளும் பல ஆட்கள் உள்ளே வருவார்களேயானால், நீங்கள் தினமும் கிருமிநீக்கம் செய்யவேண்டும் எனவும் பரிந்துரைக்கப்படுகிறது.

## என்னுடைய வேலைத்தலத்தில் 'கோவிட்-19' நோய்த்தொற்று உள்ள ஒருவர் இருந்தால் என்ன செய்யவேண்டும்?

உங்களுடைய வேலைத்தலத்தில் 'கோவிட்-19' நோய்த்தொற்று உள்ள ஒருவர் இருந்தால், உங்களுடைய 'மாநில அல்லது எல்லைப்பகுதி சுகாதார அதிகாரம்' (state or territory health authority) நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லும். அவர்களுடைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.

ஆட்கள் வேலைத்தலத்திற்குத் திரும்புவதற்கு முன்பாக உங்களுடைய வேலைத்தலமானது முற்றிலுமாகச் சுத்திகரிப்பு செய்யப்பட்டுக் கிருமிநீக்கம் செய்யப்படவேண்டியிருக்கும்.

## தொழிலாளர்கள் பயன்படுத்தும் அவர்களுடைய சொந்தப் பொருட்களைக் குறித்து என்ன செய்வது?

கிருமிநீக்கத்திற்கான துடைப்புக் காகிதங்களைப் பயன்படுத்தி, கண்ணாடிகள், தொலைபேசிகள் போன்ற வேலைத்தலத்தில் பயன்படுத்தப்படும் ஒருவருடைய சொந்தப் பொருட்களை அவ்வப்போதுத் தவறாமல் சுத்தம் செய்யவேண்டும்.

## எல்லாப் பொருட்களும் கடைகளில் விற்பனையாகித் தீர்ந்திருந்தால், நான் என்னுடைய சொந்தக் கிருமிநாசினியைத் தயாரித்துக்கொள்ளலாமா?

கடைகளில் வாங்கப்படும் கிருமிநாசினிகள் அரசின் தர நிர்ணயங்களைப் பூர்த்தி செய்பவையாக இருக்கும், ஆதலால் அவை செயலூக்கமானவை என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும், 'ப்ளீச்' மற்றும் தண்ணீரைப் பயன்படுத்திக் கிருமிநாசினிக் கலவை ஒன்றை நீங்கள் தயாரித்துக்கொள்ளலாம். இரசாயனப் பொருட்கள் ஆபத்தானவையாக இருக்கக்கூடுமாதலால், அவற்றை நீங்கள் சாக்கிரதையாகக் கையாளுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

## சுத்திகரிப்பு செய்யும்போது என்னுடையப் பணியாளர்கள் எப்படிப்பட்ட உடுப்புகளை அணியவேண்டும்?

பெரும்பான்மையான சூழல்களில், உங்களுடைய வேலைத்தலத்தினைச் சுத்திகரிப்பு செய்வதற்காகப் பாதுகாப்பு உடுப்புகளை அணியவேண்டிய தேவை உங்களுடைய தொழிலாளர்களுக்கு இருக்காது. ஆரம்ப நிலையில்:

- கையுறைகள் குறைந்தபட்சத் தேவைப்பாடாகும்
- சந்தேகிக்கப்படும் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட 'கோவிட்-19' தொற்றினால் ஒரு பகுதி பாதிக்கப்பட்டிருந்தால், மருத்துவ முகக்கவசங்கள் பயன்படுத்தப்படவேண்டும்.
- அங்கிகள் மற்றும் ஒரு-முறை பாவிப்பு உடல்போர்த்தி-உடுப்புகள் தேவைப்படாது.
- சரீரப் பாதுகாப்பு சாதனங்கள் எதுவும் தேவைப்பட்டால் அவற்றை நீங்கள் கொடுக்கவேண்டும், மற்றும் அவற்றைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவது எப்படி என்பதைப் பற்றியப் பயிற்சியை உங்களுடைய தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

## நுண்ணுயிர்க்கொல்லி உற்பத்திப்பொருட்கள் 'கோவிட்-19'-ஐக் கொல்லுமா?

நுண்ணுயிர்க்கொல்லி உற்பத்திப்பொருட்களானவை நுண்ணுயிரிகளைக் கொல்வதற்காக வடிவமைக்கப்பட்டவை. இருந்தாலும், 'கோவிட்-19' நோயானது ஒரு நுண்ணுயிரியை விட ஒரு வைரஸ்-இனால் ஏற்படுத்தப்படுகிறது, ஆகவே நுண்ணுயிர்க்கொல்லி உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையில்லை.

கைகளைக் கழுவுவதற்கு, எப்போதும் பயன்படுத்தும் சோப்பும், வென்னீரும் செயலூக்கமுடையதாக இருக்கும்.

## மேலதிகத் தகவல்கள்

'கோவிட்-19' மற்றும் வேலைச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு Safe Work Australia website - இற்குச் செல்லுங்கள்.